**சுருக்கம்**

வேளாண்மை – உழவர் நலன் – தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் – தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கு **"டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்"** எனப் பெயர் மாற்றம் செய்தல் – ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (பக) துறை**

அரசாணை (நிலை) எண். 220

நாள்: 12.10.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054,
சோபகிருது வருடம்,
புரட்டாசித் திங்கள்–25ஆம் நாள்

படிக்க-

1. அரசாணை (நிலை) எண்.173, வேளாண்மைத் (பக) துறை, நாள் 20.11.2014
2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் 11.10.2023 அன்று அறிவிக்கப்பட்ட அறிவிப்பு.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், இன்னபிறவற்றுடன் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டையில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் துவக்க ஆணை வெளியிடப்பட்டது.

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வேளாண் விஞ்ஞானி டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் அளப்பரிய பணிகளை நினைவுகூரும் வகையில், 11.10.2023 அன்று தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

> “தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையிலுள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்று அழைக்கப்படும். “

3. இந்நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் இயங்கிவரும் அரசு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் இனி முதற்கொண்டு, **“டாக்டர். எம்.எஸ். சுவாமிநாதன் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்”** எனப் பெயர் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

4. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் அவர்கள் மேலே பத்தி 3-ல் உள்ள ஆணைப்படி தக்க நடவடிக்கை மேற்கொண்டு அவ்விவரத்தினை அரசுக்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சி.சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-641003.
ஆணையர், வேளாண்மைத்துறை, சென்னை- 600 005.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சென்னை-600 005.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை,
சென்னை-600 032.
இயக்குநர் (மு.கூ.பொ), சர்க்கரைத் துறை, சென்னை - 600 035.

இயக்குநர் (மு.கூ.பொ),
விதை சான்றளிப்பு மற்றும் அங்ககச் சான்றளிப்புத் துறை,
சென்னை – 600 032.
செயல் இயக்குநர் (மு.கூ.பொ),
தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-600 032.
தலைமைப் பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை,
சென்னை-600 035.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர்,
சென்னை-600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளரின் தனிச்
செயலாளர், வேளாண்மை – உழவர் நலத்துறை,
சென்னை-600 009.
வேளாண்மை – உழவர் நலத் (அ.ந.மு.3 / வ(ம)தி) துறை,
சென்னை-600 009.
கோ.எண்.3030/பக/2023.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/10/2023

பிரிவு அலுவலர்

12/10/2023